**மாதிரி பொதுத்தேர்வு - 01**
**பத்தாம் வகுப்பு- தமிழ்**

**காலம் :3.00மணி** **மதிப்பெண்: 100**

பகுதி–1 (மதிப்பெண்கள் :15)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 15 × 1=15

1.“பாடு இமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ.கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
ஆ.கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ.கடல்நீர் ஒலித்தல் ஈ.கடல்நீர் கொந்தளித்தல்

2.தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காயும் தென்னையில் கெட்ட காயும் உணவுக்குப் பயன்படாது.இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது
அ.சண்டும் சருகும் ஆ.அல்லிக்காயும் ஒல்லிக்காயும்
இ.கூகைக்காயும் தேரைக்காயும்
ஈ.ஒல்லிக்காயும் அல்லிக்காயும்

3.’பெரிய மீசை வந்தார்’இச்சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ.பண்புத்தொகை ஆ.உவமைத்தொகை
இ.அன்மொழித் தொகை ஈ.உம்மைத் தொகை

4.’இலா’ என்பது––––––மென்பொருள்.
அ.உரையாடு ஆ.பாரத ஸ்டேட் வங்கி
இ.இயந்திர மனிதன் ஈ.இதழியியல்

5.’’அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தோம்“என்று யார் யாரிடம் கூறினார்?
அ.இடைக்காடனார் இறைவனிடம்
ஆ.இறைவன் இடைக்காடனார் இடம்
இ.இறைவன் குலேச பாண்டியனிடம்
ஈ.குலேச பாண்டியன் இறைவனிடம்

6.தன் திணைப்பெயரோடு அமையாத ‘யாழ்’கருப்பொருளைக் கொண்ட திணை எது?
அ.முல்லை ஆ.நெய்தல் இ.மருதம் ஈ.பாலை

7.“வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும் கோலொடு நின்றான் இரவு” –இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது?
அ.வஞ்சப்புகழ்ச்சி அணி ஆ.உவமை அணி
இ.உருவகவணி ஈ.ஏகதேசஉருவக அணி

8.தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது––––
அ.திருக்குறள் ஆ.புறநானூறு
இ.சிலப்பதிகாரம் ஈ.கம்பராமாயணம்

9.ஆசிரியப்பாவில் அமைந்த நூல்கள்–––
அ.திருக்குறள் நாலடியார்
ஆசிலப்பதிகாரம் மணிமேகலை இ.கலித்தொகை
ஈ.இன்னா நாற்பது,இனியவை நாற்பது

10.பின்வருவனவற்றுள் அச்சிடப்படாத தமிழ் நூல் எது?
அ.முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்
ஆ.மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ்
இ.பெருமாள் திருமொழி ஈ.முல்லைப்பாட்டு

11.நீ வந்தேன் என்பது –––––– வழு.
அ.திணை ஆ.பால் இ.கால ஈ.இட

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

“அன்று அவண் அசைஇ அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரம் எனினே,”

12.இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ.பெருங்கௌசிகனார் ஆ.அதிவீரராம பாண்டியர்
இ.வீரமாமுனிவர் ஈ.குலசேகராழ்வார்

13.இப்பாடல் இடம் பெற்றுள்ள தொகுப்பு நூல் எது?
அ.பத்துப்பாட்டு ஆ.எட்டுத்தொகை
இ.கீழ்க்கணக்கு ஈ.காப்பியம்

14.இப்பாடலில் சிற்றூர் என்னும் பொருள் தரும் சொல் எது?
அ.அல்கி ஆ.பாக்கம் இ.நரல் ஈ.வயிரம்

15.பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனைச்சொற்களை குறிப்பிடுக.
அ.அன்று– கன்று ஆ.அலங்கு –சிலம்பு
இ.அன்று – அலங்கு ஈ.அன்று –அவண்

பகுதி– 2 (மதிப்பெண்– 18)
பிரிவு– 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்க. 4 × 2 = 8

(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)

16.விடைகளுக்கு ஏற்ற வினா அமைக்க.
அ.விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது.
ஆ.வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.

17.ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள் சிலவற்றை எழுதி,அதன் இலக்கியப்பெயர் குறிப்பிடவும்?

18.நீங்கள் ஒரு நூலை மொழிபெயர்க்க இருக்கிறீர்கள் என்றால் எந்த நூலை,எந்த மொழியில் மொழிபெயர்ப்பீர்கள்?

19.’’பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம்“ இவ்விளக்கத்திற்கு வள்ளுவர் கூறும் தொடரினை எழுதுக.

20.அன்னைமொழியே பாடலில் குறிப்பிடப்படாத ஐம்பெருங்காப்பியங்கள் எவை?

21.’’விடல்’’ என முடியும் திருக்குறளினை எழுதுக.

www.Padasalai.Net

**பிரிவு –2**

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்க. 5 × 2=10**

**22.**இன்னாசியார் புத்தகங்களை வரிசைப் படுத்தினார்.அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார்.புத்தகங்களைக் கேட்டவருக்கு எடுத்துக்கொடுத்தார்.(**தொடர் சொற்றொடராக மாற்றுக.**)

**23.பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| **தங்கும் , அவிழும் , கவிழும் , தயங்கும்** |

அ.காலை ஒளியினில் மலரிதழ்--------
சோலை பூவினில் வண்டினம்-------
ஆ.மலைமுகட்டில் மேகம் ----அதை
பார்க்கும் மனங்கள் செல்ல-------

**24.கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைக்க.**
1.தொடு – தோடு 2.அலை–ஆலை

**25.கலைச்சொற்கள் தருக.**
1.patent 2.Land freez

**26.பின்வரும் உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.**
1.சிலைமேல் எழுத்து போல 2.பசுமரத்தாணி போல

**27.பொருத்தமான நிறுத்தக்குறிகள் இடுக.**
ஹலோ மேரி உள்ளே வர விரும்புகிறாயா ஒரு வெள்ளைச் சிறுமி கேட்டாள் மேரி தயங்கினாள்

**28. பகுபத உறுப்பிலக்கணம் தருக.** “உரைத்த”

**பகுதி – 3 (மதிப்பெண்கள்– 18)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 × 3 = 6**

29.மொழிபெயர்ப்பு சரியாக அமையவில்லை என்றால் என்ன நேரும் என்பதற்குச் சான்று தருக.
30.பூங்காற்றும் கடல்காற்றும் பேசிக்கொள்வது போல் உரையாடல் அமைக்க.
**31.உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பாவை குறித்த செய்திகள் சங்ககாலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையான தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. திருக்குறளில் மரப்பாவையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாசகத்திலும் பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் காணமுடிகின்றது.
அ.இருவகைப் பாவைகள் எவை?
ஆ.இவ்வுரைப்பத்தியில் இடம்பெற்றுள்ள நூல்கள் யாவை?
இ.இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**பிரிவு–2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**(34ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 2 × 3 = 6**

32.”நல்ல வேளையில் நாட்டுவோம் கொழுவை” என்று கு.ப.ராஜகோபாலன் குறிப்பிடும் காரணத்தை, அவர் கவிதை வழி விளக்குக.
33.இட்டுறமொழிதல் என்றால் என்ன?அவர் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

**34.அடிபிறழாமல் எழுதுக.**

“பண்பே” என முடியும் அதிவீரராம பாண்டியரின் பாடல்.
அல்லது
“தூசும் துகிரும்” எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

**பிரிவு– 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 × 3 = 6**

35.அகவற்பாவின் பொதுஇலக்கணம் யாது?
36.”இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.”
– குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.
37.நிரல் நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

**பகுதி– 4 (மதிப்பெண் –25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 × 5 = 25**

38.அ.நும் பாடப்பகுதியில் உள்ள விரிச்சி கேட்டல் நிகழ்வை விளக்குக.

(அல்லது)

ஆ.புலவர்களால் எழுதப்பட்டு,கல்தச்சர்களால் பொறிக்கப்படுபவை எவை?அவற்றின் நயத்தை எழுதுக.

39.அ.நும் பகுதியில் திறந்தவெளி கழிவுநீர்க் கால்வாயால் ஏற்படும் துன்பங்களைக் குறிப்பிட்டு,பாதாளச்சாக்கடை அமைக்க வலியுறுத்தி,மாநகராட்சி ஆணையாளருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ.மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்”எனும் தலைப்பிலான ஓவியப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற நண்பனை வாழ்த்தி மடல் எழுதுக.

www.Padasalai.Net

**40.பின்வரும் படத்தினைப் பார்த்து,உன் சொற்களால் கவினுற எழுதுக.**



41."13,குறிஞ்சி நகர்,ஈரோடு–638 001." என்ற முகவரியில் வசிக்கும் திரு.ச.பாரதி என்பவர்,ஈரோடு–அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் படித்த தம் மகள் பா.பைந்தமிழை விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக்க விரும்புகிறார்.உரிய படிவம் நிரப்புக.

42.அ.விபத்துகள் பெருகிக் கொண்டு வருகின்றன. விபத்துகளைத் தவிர்க்கும் வழிமுறைகள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

**(அல்லது )**

**ஆ.மொழிபெயர்க்க.**

*The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark.The milky clouds starts their wandering.The colourful birds start twitting their morning melodies in percussion. The Cute butterflies dance around the flowers.The flowers fragrance fills the breeze. The gently blows everywhere and makes everything pleasant.*

**பகுதி – 5 (மதிப்பெண்– 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடைஅளிக்க.**
**3× 8 = 24**

43. அ. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி எழுதுக.

**அல்லது**

ஆ.ம.பொ.சிவஞானம் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது.அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44.அ.கிராமத்து விருந்து எவ்வாறு நடக்கிறது என்பதை கி.ராஜநாராயணனின் கரிசல் களக்கதை வழி எழுதுக.

**(அல்லது)**

ஆ.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45.அ.சாலை விதிகள் – சாலை பாதுகாப்பு – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – தலைக்கவசம்–எச்சரிக்கை விளக்குகள் – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு,தலைப்பு ஒன்றினை அமைத்து கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ.உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரையாக்குக.

குறிப்புகள்

முன்னுரை – பொருட்காட்சி நடைபெறும் இடம் – பல்வேறு விளையாட்டு அமைப்புகள் – பலவிதமான வணிகம் – அரசின் நலத்திட்ட அரங்குகள் – மகிழ்வூட்டும் மக்கள் கூட்டம் – பாரம்பரிய நிகழ்கலைகள் – முடிவுரை

**ஆக்கம்**
**ச.சேட்டு மதார்சா, ப.ஆ.**
**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா**
**உயர்நிலைப் பள்ளி,ஈரோடு.**
**அலைபேசி – 8883681115**